ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2513/31 - 2026 නොවැම්බර් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.11.05

2513/31 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 17745 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் மிலேனியம் டிரைவ், IT பார்க், மாலபே 10115 இல் அமைந்துள்ளதுமான "சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட" தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2025, யூன் 18 ஆந் திகதிய 2441/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "வலையமைப்பு பாதுகாப்பு மற்றும் தடயவியலில் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்பு" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

அட்டவணை I

நிபந்தனைகள்

1. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட், கடல்சார் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 5) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது:-

   (அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல் மற்றும் இரசாயனவியலில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்; அல்லது

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சாதாரண தரத்தில்) ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

3. சினெக் கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, இக்கட்டளையின் வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டினுள் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு மாணவர்களை அனுமதித்தல் வேண்டும்.

அட்டவணை II

நிரல் I பட்டம்	*நிரல் II* பட்டத்துக்கான சுருக்கீடு
கடல்சார் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு	பீஎஸ்சீ (கடல்சார் பொறியியலில்)

கலாநிதி **ஹரிணி அமரசூரிய**
கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்

கொழும்பு,
2026, ஒற்றோபர் 26.

EOG 11 - 0034